# தேவனும் விஞ்ஞானமும் ஒத்துப் போகின்றதா?

*ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பெஞ்சமின் பயர்ஸின் கூற்றுப்படி, "விஞ்ஞானமும் மதமும் பிறந்தது ஒரே வீடு ஆகும், மற்றும் அந்த வீடு தனக்கெதிராகத் தானே பிரிக்கப்பட்டிருப்பதில்லை. அவர்களுக்கிடையே ஒரு போராட்டம் இருக்கின்றது, மற்றும் இருக்கும் என்பது போலத் தோன்றுகின்றது; ஆனால் அது மனிதரிடத்தில் தோன்றியதாக, நமது அறிவுக் குறைப்பாட்டிலிருந்து உதித்ததாக உள்ள தேயன்றி, அதனுடைய மாபெரும் தன்மையிலிருந்து தோன்றியதல்ல" என்று கூறினார். உண்மையான மதம் மற்றும் உண்மையான விஞ்ஞானம் ஆகியவற்றிற்கிடையே மோதல் என்பது, இணை கோடுகள் சந்தித்துக் கொள்வது என்பது போலவே சாத்தியமற்றதாக உள்ளது. சத்தியமானது தனக்குத்தானே முரண்படுவதில்லை. தேவன் சத்தியமாய் இருக்கின்றார் (யோவா. 14:6), தேவனே முதல் விஞ்ஞானியாய் இருக்கின்றார், மற்றும் தேவன் "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிறார்" (எபி. 12:2).*

*பிலேயாமின் தீர்க்கதரிசனத்தில் உள்ளது போல, இயற்கை யாவற்றிலும் வலிந்து திணிக்கப்படாத மற்றும் கட்டுப்படுத்த முடியாத ஒரு வியப்புக் கூற்று உள்ளது: "தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக் காலத்திலே ... சொல்லப்படும்" (எண் 23:23ஆ). இஸ்ரவேலின் கவிஞர் சங்கீதம் 97:6ல், வானங்கள் அவைகளின் சிருஷ்டிகரின் மகிமையை அறிவிக்கின்றன, அப்போது "பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது" என்று பாடினார். மனித விஞ்ஞானிகளின் சாதனைகள் திகைப்புக்குரியனவாய் இருக்கின்ற வேளையில், மாபெரும் விஞ்ஞானி ஒருவர் எல்லாப் பொருட்களையும் வடிவமைத்து, எல்லா விதிகளையும் உண்டாக்கினார். மாபெரும் மனிதர்களால் சிருஷ்டிக்க முடியாது;தேவன் உண்டாக்கிய கருவிகளை மாத்திரமே அவர்களால் உபயோ கிக்க முடியும். மனிதன், "தேவனுடைய சிந்தனையை அவருக்குப் பின்னால் சிந்தித்தல்" என்பதை மட்டுமே செய்ய முடியும். தேவனுடைய சிந்தனைகளை அவர்கள் எவ்வளவுக்கு அதிகமாய்க் கண்டறிகின்றனரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியவைகள் பற்றி பயம் கலந்த மரியாதை கொள்ளுகின்றனர். "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை" (நீதி. 25:2).*

*முதல் ஆகாய விமானத்தில் 1903 - ம் ஆண்டில் பறந்த வில்பர் ரைட்*

மற்றும் ஆலிவர் ரைட் சகோதரர்கள் பாராட்டுக்குரியவர்களே; ஆனால் காற்றியக்கத்தை நுட்பமாய் அமைத்த தேவன் அதிகமாய் பாராட்டப்பட வேண்டும். வில்லியம் ஹார்வி கண்டறிந்த இரத்த ஓட்டம் (1628) உலகளவில் புகழப்படுகின்றது, ஆனால் இதற்கான அடிப்படைப் பாராட்டு, இரத்தத்தை (மனித உடலில்) ஓடச் செய்தவருக்கே உரியதாகும். சங்கீதக்காரர், "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால் உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங். 139:14) என்று கூறினார். எனவே விஞ்ஞானமும் மதமும் எப்பொழுதாவது ஒத்துப் போகாமலிருக்க முடியும் என்பது அறிவுக்கு முற்றிலும் மாறானதாகும். விஞ்ஞான தேவனைப் பற்றிய தவறான கருத்துக்களும், மதத்தின் தேவனைப் பற்றிய தவறான கருத்துக்களும் மோதக்கூடும், அவ்வாறே மோதுகின்றன ஆனால் சத்தியமே மேற்கொள்ளும். ஞானமானது அதன் பிள்ளைகளால் நியாயந்தீர்க்கப்படுகின்றது.

கோப்பர்நிக்கஸின் (கோள்களின்) அமைப்புக்கு ரோமின் கண்டனமும், அது கலிலியோ கலிலிக்குக் கொடுத்த தண்டனையும் போல, தவறான மதங்கள், தங்களுக்கெதிராக விஞ்ஞானிகள் இருப்பதாகத் தப்பெண்ணம் கொண்டுள்ளன. 1543ல் நிக்கொலஸ் கோப்பர்நிகஸ் என்பவரால் முன் மொழியப்பட்ட கதிரவனை மையமாகக் கொண்ட (சூரியனை மையமாகக் கொண்ட) உலக அமைப்பின் மீது கலிலியோ உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். கோப்பர்நிகஸின் கொள்கையானது கத்தோலிக்க சபையின் பூமியை மையமாகக் கொண்ட அண்டத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலுடன் முரண்பட்டதால் ரோமாபுரியில் உள்ள "பரிசுத்த அலுவலகம்" கோப்பர்நிகஸின் கொள்கைக்கு எதிராக 1616 - ம் ஆண்டில் ஒரு அதிகார ஆணையை வெளியிட்டது. கலிலியோவின் பணிகள் தடை செய்யப்பட்டன, மற்றும் அவர் தமது "மத எதிர்ப்பு வாதத்தின் உணர்வெழுச்சி மிக்க சந்தேகத்தினால்" ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டார், இருப்பினும் அந்தத் தண்டனையானது விரைவிலேயே வீட்டுக் காவலாக மாற்றப்பட்டது.[1]

இதற்கு மாறாக, பொய்யான விஞ்ஞானிகள் சில மதவாதிகளை ஒதுக்கி வைத்துள்ளனர். எப்படியிருப்பினும், எந்தத் துறையிலும் தவறான எண்ணம் மற்றும் விரோதப் போக்கினால் அடிக்கடி மறைக்கப்பட்டாலும் சத்தியம் சத்தியமானதாவே உள்ளது. முனைவர் ஸ்பேரோ அவர்கள், "சத்தியத்தை நாடுங்கள்; அது வரும்போது வரட்டும்; அது தனது விலையைப் பெறும்" என்று கூறினார். அவரைக் காட்டிலும் மகா பெரியவர் ஒருவர், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32) என்று உரைத்தார். விஞ்ஞானத்தை போலவே மதத்திலும் சத்தியங்கள் என்பவை மனிதர்களை அறியாமையிலிருந்தும், மூட நம்பிக்கையிலிருந்தும், வியாதிகளிலிருந்தும், மற்றும் இருளில் இருந்தும் தொடர்ந்து விடுவிக்கின்றன.

இருப்பினும், மதத்தில் சத்தியம் என்று அழைக்கப்படுகின்ற ஒவ்வொன்றும் கிறிஸ்துவினுடையவையாய் இருப்பதில்லை. யோவான்,

''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' (1 யோவா. 4:1) என்று எச்சரித்தார். அது போலவே பேதுருவும், "கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக் குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள்" (2 பேது. 2:1) என்று கூறினார். தேவன் கி.மு. 4004ல் இந்த உலகத்தை படைத்தார் என்று ஒரு மதவாதி உரிமை கோரும் பொழுது, அவர் உறுதிப்படுத்த இயலாத ஒரு உரிமைகோருதலை ஏற்படுத்துகின்றார். அது எப்பொழுதாயிருந்தாலும் தேவன் அதைத் தாம், "ஆதியிலே" (ஆதி. 1:1) செய்ததாக மட்டுமே கூறியுள்ளார்.

அது போலவே, விஞ்ஞானத்தில் உண்மை என்று அழைக்கப் படுவதெல்லாம் விஞ்ஞானமாயிருப்பதில்லை. அவற்றில் அதிகமானவை விஞ்ஞானம் (உண்மையான அறிவு) என்று காணப்படாமல், மனிதரின் கற்பனையாக மட்டுமே உள்ளது. தானாகவே உற்பத்தியாகுதல் என்பது விஞ்ஞானம் என்று கருதப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஒரு காலத்தில் விஞ்ஞானத்திற்குப் பொருத்தமாகத் தோன்றிய இந்தக் கோட்பாட்டை V. J. O'Brien என்பவர், "தவளைகள், ஈக்கள், கொசுக்கள் கொட்டும் குளவிகள் போன்றவை வண்டல் மற்றும் சேற்றிலிருந்து வந்தன; தேனீக்கள் கன்றுக்குட்டியின் இறைச்சியிலிருந்து வந்தன; வண்டுகள் கோவேறுக் கழுதையின் இறைச்சியில் இருந்து வந்தன; தேள்கள் நண்டுகளில் இருந்து வந்தன" என்று சுருக்கியுரைத்தார். "ஒளியூட்டப்பட்ட" ஒரு கிறிஸ்தவர், ''ஜீவன் படைப்பு பற்றிய வேதாகமத்தினுடைய பழைமையான வரலாற்றினை" நம்பாதபடிக்கு, அந்தப் பொய்யான விஞ்ஞானத்தை ஏற்றுக் கொண்டிருந்தாரென்றால், இன்றைய நாட்களில் நாம் அந்தக் கிறிஸ்தவர் தமது கர்த்தரிடம் கொண்டிருந்த பற்றுறுதி பற்றி நாம் என்ன நினைப்போம்? அப்படிப்பட்ட ஒருவர், ''விஞ்ஞானத்தை தமது தேவனாக ஏற்றுக் கொண்டதாக''வே தோன்றும் மற்றும் கிறிஸ்து அந்தத் திட்டத்தினுள் பொருந்துவாரென்றால் அவர் கிறிஸ்துவையும் ஏற்றுக் கொள்வார்; இல்லையென்றால் அவர் கிறிஸ்துவை மறுதலித்து விடுவார். தன்னைத் தானே திருப்பிக் கொள்ளும் "விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்பவராக'' ஒருவர் காணப்பட்டால், அது அப்படிப்பட்ட உண்மையின்மையானது எவ்வளவு சங்கடத்திற்குரியதாயிருக்கும்!

விஞ்ஞானமானது திருப்பப்பட்டுள்ளது. தானாகவே உற்பத்தியாகுதல் என்பது மறுக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறு செய்திருந்ததாக விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டனர். சிலரைப் பொறுத்தமட்டில், இப்படிப்பட்ட ஒரு முகமானது அவர்களின் நம்பிக்கைக்கு எதிராகத் திரும்பிற்று, ஆனால் அதை அவர்கள் செய்ய வேண்டியதாயிருந்தது. தாமஸ் H. ஹக்ஸ்லீ அவர்கள், "உயிரானது உயிரிலிருந்துதான் தோன்ற முடியும் என்ற கோட்பாடானது எல்லா வரிசையிலும் வெற்றிகரமானதாக உள்ளது"

என்று எழுதினார். அவர்கள் இந்த விஞ்ஞானத்தின் பொய்மையை மறுக்கவில்லை, ஏனென்றால் இயற்கையின் எளிய நிரூபணங்களினால் மட்டும் "அவருக்குள் நாம் பிழைக்கின்றோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப். 17:28) எனப்படுவரிடம் இருந்துதான் உயிர் அனைத்தும் வந்தன என்று வேதாகமம் போதிக்கின்றது. கிறிஸ்தவர் ஒருவருக்கு, படைப்பின் கர்த்தாவும் நமது சொந்த சகோதரருமான பரிபூரணமான கிறிஸ்துவின் மேல் விசுவாசம் என்பது சத்தியம் யாவற்றின் அடிப்படைத் தத்துவமாக உள்ளது. இன்றைய நாட்களின் "ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞானம்'' என்பது கிறிஸ்துவுக்கு முரண்பாடாக இருந்தால், ஒரு நேர்மையான சீஷன் அதனால் மனக்கலக்கம் அடைவதில்லை. இதற்கு முன்பும் இது இவ்விதமாகவே செய்யப்பட்டுள்ளது, ஆனால் இயேசு கிறிஸ்து, "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி. 13:8).

கடவுள் பக்தியற்ற பயரி சைமன் டிலேப்லேஸ் (1749-1827) என்பவர், ஆதியாகமத்தில் போதிக்கப்படும் சத்தியங்களை மறுத்து அதற்குப் பதிலாக படைப்பைப் பற்றிய தனது "நெபுலார் கருதுகோளை" வெளியிட்டார், பலர் குழப்பம் அடைந்தனர். பல விஞ்ஞானிகள் தாங்கள் இயற்கையோடு நடந்திருந்தது போல, தேவனுடன் நடந்திராததாலும், மனிதர்களின் புத்தகங்களைத் தாங்கள் வாசித்தது போல, வேதாகமத்தைத் தினமும் வாசித்திராததினாலும், அவர்கள் இந்தப் புதிய போதனையினால் முற்றிலும் பரவச நிலை அடைந்தனர். அதினால் வானவியல் பாதிக்கப்பட்டது மட்டு மின்றி, புவி ஆய்வியலானது அதின் மீது வெகு நம்பிக்கையோடு அடிப்படை கொண்டது. W. W. ஹெரிங் என்பவர், "ஒரு நூறு ஆண்டுகளுக்கு அது தீவிரமான கேள்வி எதுவும் கேட்கப்படாதிருந்தது'' என்று கூறினார். அப்படியிருப்பினும் வேதாகமத்தைத் தாழ்மையோடு விசுவாசிக்கிறவர்கள் மனக்கலக்கம் அடையாதிருந்தனர், ஏனெனில் அவர்களின் விசுவாசமானது, "மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிலை நின்றது" (1 கொரி. 2:4).

சோதிடமானது ஒரு காலத்தில் "விஞ்ஞான பூர்வமானது'' என்று அழைக்கப்பட்டது. ஒவ்வொரு அரசவையிலும் வானங்களின் நிலையை விளக்கியுரைக்கும் நபர் ஒருவர் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டிருந்தார். முப்பதாண்டுகளின் யுத்தத்தின் பொழுது இம்பீரியல் இராணுவத்தின் பொஹீமியக் களப்படைத் தளபதியாய் இருந்த ஆல்பிரெக்ட் வால்லன்ஸ் டெய்ன் என்பவர் ''தாம் எப்பொழுதும் தம் வசமாய் வைத்துக் கொண்டிருந்த தனது சோதிடரை அதிகமாய் நம்பியிருந்தார்'' என்று ரோல்லின் T. சேம்பர்லின் என்பவர், அறிக்கை தந்தார். ஒப்புக்கொள்ளப் பட்ட வானவியல் அறிஞரான ஜோஹன்னெஸ் கெப்ளர் என்பவரும்கூட வால்லென்ஸ்டெயின் என்பவருக்கு ஒரு ஜாதகம் எழுதிக் கொடுத்தார். இருப்பினும், ஹெரிங் சுட்டிக்காட்டியபடி, இந்த ஜாதகங்கள் ஈகரில் 1634ல் நடைபெற்ற அவரது கொலையைப் பற்றிப் பொதுவாக எச்சரிக்கத் தவறிவிட்டன.

விஞ்ஞானத்தின் தவறான கருத்துக்கள் அப்புறப்படுத்தப்படுவது போலவே, வேதாகமம் என்ன போதிக்கின்றது என்பது பற்றிய தவறான

கருத்துக்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. முதல் நூற்றாண்டின் இறுதியிலேயே உலகமானது முடிவுக்கு வந்துவிடும் என்று சிலர் நினைத்த பொழுது, அது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கூறியிருந்ததைப் பற்றிய அம்மக்களின் தவறான கருத்தாயிருந்ததேயன்றி, அந்தத் தவறானது அந்த எழுத்தாளர்கள் உண்மையில் கூறியிருந்ததாக இருக்கவில்லை. வேதாகமத்தின் ஆதாரத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட பலர் கி.பி. 1000 ஆண்டில் உலகம் அழிந்து விடும் என்று நினைத்த பொழுது, அவர்கள் விரைவிலேயே தங்கள் கூற்றைத் தாங்களே மறுப்பவர்களாகி விட்டனர் - வேதாகமம் என்ன போதித்தது என்பதை அவர்கள் அறியவில்லை. 1843ல் வில்லியம் மில்லரின் பின்பற்றாளர்கள் தங்களின் பரத்துக் கேறும் உடைகளை உடுத்திக் கொண்ட பிறகு, அவர்கள் கரிமப் பரிணாமத்தை நம்பிய கற்றறிந்த மனிதர்கள் போலவே உண்மையுள்ளவர்களாய் இருந்தனர். பரிணாமக்காரர்கள் இயற்கையைப் பிறழ்வு படுத்தியது போலவே அந்த முன் வருகையாளர்கள் வேதாகமத்திற்கு அதிகமாகத் தவறான விளக்கம் அளித்தனர்.

உண்மையான விஞ்ஞானம் மற்றும் உண்மையான மதம் ஆகியவற்றில் எது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? விஞ்ஞானம் என்னதான் சாதித்திருப்பினும், அது ஒருக்காலும் வாழ்வின் நிறைவான இலக்காக முடியாது. விஞ்ஞானம் வரையறைக்குட்பட்டது; அது இயற்கையை மட்டுமே கையாளுவதாக உள்ளது. மனிதன் என்பவன் ஒரு விலங்கைக் காட்டிலும் மேலானவனாதலால், இயற்கை விஞ்ஞானங்கள் மனிதனின் எல்லாத் தேவைகளையும் சந்திக்க முடியாது. மதமோ, ஒரு முதிய சகோதரன் போல இருந்து, மனிதனை எடுத்துக் கொண்டு, விஞ்ஞானம் தவறிழைக்கும்போது அவனது ஆவிக்குரிய தேவைகளை நிறைவேற்று கின்றது. விஞ்ஞானம் செய்ய முடியாதவைகளை மதமானது செய்கின்றது. விஞ்ஞானம் மதிப்புக்குரியதே, ஆனால் மதமானது இன்னும் அதிகமான மதிப்புக்குரியதாகும். நாம் விஞ்ஞானத்தின் கொடைகளை “உண்மையான ஆர்வத்துடன் வாஞ்சிக்கிறோம்'' ஆனால், ''இன்னும் மேன்மையான மார்க்கம் ஒன்று'' உள்ளது. முனைவர் ஹென்றி லிங்க் அவர்கள், விஞ்ஞானத்தின் தவறான கருத்துக்கள் தம்மை மதத்திற்குப் புறம்பே வழிநடத்திச் சென்று விட்டதாகக் கூறினார்; ஆனால் விஞ்ஞானத்திற்குள் மேன்மையான உட்கண்ணோட்டங்கள் தம்மை மீண்டுமாக மதத்திற்குத் திரும்ப வழி நடத்தியதாகவும், அதன் (மதத்தின்) மேன்மைத் தன்மையை உணரச் செய்ததாகவும் கூறினார்.

> இயல்விஞ்ஞானங்கள் மனிதருக்குப் பொழிந்துள்ள நீண்ட ஆயுள், வசதியான ஒரு வாழ்வு, சரீர வலிகளில் இருந்து அதிகமாய் விடுதலையான ஒரு வாழ்வு, மற்றும் பல வகையான ஆர்வங்கள் உள்ள பொருட்கள் மற்றும் கல்வி அனுபவங்கள் நிறைந்த ஒரு வாழ்வு போன்ற மாபெரும் பயன்கள் அளித்திருப்பினும் - தனிநபர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கான, குடும்பங்கள் அதிக ஒருமைப்பாடுடன் இருப்பதற்கான, அரசுகள் அல்லது அரசியல் அமைப்புகள் ஞானத்துடன் இருப்பதற்கான அல்லது நாடுகள் மிகக்

> குறைவாகவே யுத்தம் செய்யச் செல்வதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.[2]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, மகிழ்ச்சியானது சுயத்தைத் தியாகம் செய்தலாலும், சுயத்தை மறுப்பதாலும் மட்டுமே உண்டாகின்றது என்று உளவியலானது கற்றுக் கொண்டுள்ளது. நண்பர்களுடையவராய் இருப்பதற்கு ஒருவர் நண்பராய் இருக்க வேண்டும் - இதுவே இயேசு எல்லா வேளைகளிலும் வற்புறுத்திய செயல் ஆகும்.

குறிப்புகள்

[1]*The 1997 Grolier Multimedia Encyclopedia,* s.v. “Galileo,” “Copernicus.” [2]Henry C. Link, *Return to Religion* (New York: Macmillan Co., 1936), 14-15.